# பேன் (Head lice)

## 1) பேன் என்றால் என்ன?

மனிதனின் தலையில் மட்டும் உயிர் வாழக்கூடிய சிறிய மண்ணிறமான பூச்சிவகை. இதற்கு மனிதனின் தலைமுடியைவிட்டு வெளியில் ஒரு நாளோ அல்லது இரண்டு நாளோ மாத்திரம் உயிர் வாழ முடியும்.

பெண் பேனானது ஏறத்தாழ 40 நாட்கள் உயிர் வாழும். அக்காலப்பகுதியில் இவை 1000 முட்டைகளை இடும். இம்முட்டைகள் தலைமுடியுடன் மிக நெருக்கமாக இணைந்து இருக்கும். முட்டை பொரித்து 7 தொடக்கம் 10 நாட்களின் பின்னர் பேன் வரும். மீண்டும் அவை 7 நாட்களின் பின்னர் முட்டை இடும்.

## 2) தலையில் பேன் எவ்வாறு ஏற்படுகிறது?

தலையில் பேன் உள்ள நபருடன் நேரடித் தொடர்பு ஏற்படுவதன் மூலம் ஏற்படுகிறது. ஒருவரின் தலையிலிருந்து மற்றொருவருக்கு 30 வினாடிகளில் தொற்றிவிடும். அரிதாக இவை தொப்பிகள், சீப்பு, தலையணை போன்றவற்றை பகிர்ந்து கொள்வதாலும் ஏற்படுகிறது.

## 3) இதற்கான அறிகுறிகள் யாவை?

பேன் உயிர் வாழ்வதற்கு அது ஒரு நாளைக்கு பல தடவைகள் இரத்தத்தை உறிஞ்ச வேண்டும். அது கடிப்பதனாலும், அதன் உமிழ்நீர், மலம் போன்றவற்றாலும் சொறிவு ஏற்படுகிறது. சில வேளைகளில் சிலர் கடியை உணர்வதில்லை. இதனால் இவர்கள் தலையில் பேன்கள் பெருகுவதை இவர்கள் உணர்வதில்லை. காயங்களில் பின்னர் நோய்க்கிருமித் தொற்று ஏற்படலாம்(Impetigo). சிலவேளைகளில் நிணநீர் கணுக்களில் வீக்கம் ஏற்படலாம்.

## 4) இதை முற்றாக மாற்றமுடியுமா?

ஆம், ஆனால் எளிதான காரியமல்ல. மருந்துவகைகளுக்கு எதிர்ப்பு தன்மையுள்ள பேன்கள் இக்காலத்தில் உண்டு. மேலும் மீண்டும் மீண்டும் தொற்றும் ஏற்படலாம்.

## 5) இதற்குரிய சிகிச்சை முறைகள் யாவை?

1. பெமித்திரின் (Permethrin) கிறீம் / lotion
2. மலத்தியோன் (Malathion lotion)

இது உலர்ந்த நிலையிலுள்ள தலைமுடிக்கு பூசவேண்டும். முடி வேரிலிருந்து முடி முழுவதும் பூச வேண்டும்.

வழமையாக 7 நாட்களுக்குப் பின்னர் மீண்டும் ஒரு முறை இம்மருந்தைப் பூச வேண்டும். அப்போது முதலில் பாவித்த போது இருந்த பேனின் முட்டைகள் பேனாக மாறியிருக்கும்.

3. ஈர்கோலி மற்றும் பேன் சீப்பால் தலையை வாருதல்.

   சுருண்ட தலைமுடி இருப்பின் Conditioner அல்லது Dimethicon பாவித்தபின் செய்வது நல்லது.

## 6) பேனிலிருந்து பூரணமாக எவ்வாறு விடுபட முடியும்?

- சிகிச்சை முறைகள் முடிவுற்ற பின்னர் ஒவ்வொரு கிழமையும் தலைமுடியை பரிசோதனை செய்ய வேண்டும்.
- வீட்டில் உள்ள மற்றைய அங்கத்தவர்களையும், பாடசாலை தோழர்களையும் பரிசோதனை செய்து பேன் இருந்தால் அதற்குரிய மருந்தைப் பாவிக்க வேண்டும்.
- குடும்பத்தில் யாருக்காவது இருப்பின் அவர்களும் ஒரே நேரத்தில் மருந்தைப் பாவிக்க வேண்டும்.
- சீப்பு மற்றும் தூரிகைகளை சுடுநீரால் கழுவ வேண்டும்.

  மேற்கூறிய முறைகள் பின்பற்றப்பட்டால் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்ப முடியும்.

## 7) பேன் ஏற்படுவதை தடுக்க முடியுமா?

தொடக்கப்பள்ளி சிறுவர்கள் கிரமமாக பரிசோதிக்கப்பட வேண்டும். இதனை ஆரம்பத்தில் அடையாளம் கண்டால் எளிதில் குணப்படுத்த முடியும். அத்தோடு மேலதிகமாக பரவுவதையும் தடுக்க முடியும்.